

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.7.2024) தமிழ்நாடு அரசின் தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன் அவர்களின் தாயார் திருமதி கல்பகம் ராமன் அவர்கள் உடல்நலக்குறைவால் காலமானதையொட்டி, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வளர்ச்சித் துறை ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் பி.எஸ். ராமன் அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### நினைவில் வாழும் வி.பி.ராமனுக்கும் - தமிழ்நாடு அரசின் தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமனுக்கும்

# சட்டத்துறையில் சிறந்து விளங்க உறுதுணையாக இருந்தவர் திருமதி கல்பகம் ராமன்!

### மறைவு செய்தியறிந்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

**சென்னை, ஜூலை 5 -**

**நினைவில் வாழும் வி.பி.ராமன் அவர்கள் வழக்கறிஞராக பணியாற்றியபோதும், தற்போது தமிழ்நாடு அரசின் தலைமை வழக்கறிஞராகப் பணியாற்றி வரும் பி.எஸ். ராமன் அவர்களுக்கும் சட்டத்துறையில் சிறந்து விளங்க உறுதுணையாக இருந்தவர் மறைந்த திருமதி கல்பகம் ராமன் அவர்கள் என்று மறைவுச் செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

மறைந்த வி.பி.ராமன் அவர்களது மனைவியும், தமிழ்நாடு அரசின் தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் அவர்களது அருமைத் தாயாருமான திருமதி கல்பகம் ராமன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருத்தமடைந்தேன். அவரது உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினேன்.

அன்னையை இழந்து வாடும் பி.எஸ். ராமன், அவரது சகோதரர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த வி.பி.ராமன் அவர்கள் திராவிட இயக்கத்தின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டதிட்டங்களை வகுப்பதில் பெரும் பங்காற்றியவர். சட்டத்துறையில் அனைவரும் வியந்து பார்க்கக் கூடிய மிகச்சிறந்த வல்லுநராக விளங்கினார். அப்படிப்பட்டவருக்கு நமது அரசு பொறுப்பேற்றவுடன், அவரது இல்லம் அமைந்துள்ள சாலைக்கு அவரது பெயரைச் சூட்டினோம். அந்த நிகழ்ச்சியில் கூட திருமதி. கல்பகம் ராமன் அவர்கள் எனக்கு ஒரு நினைவுப் பரிசை வழங்கி நீண்டநேரம் உரையாடிக் கொண்டிருந்தது இப்போதும் என் நெஞ்சில் நிழலாடிக் கொண்டிருக்கிறது.

வி.பி.ராமன் அவர்களும், தற்போது பி.எஸ்.ராமன் அவர்களும் சட்டத்துறையில் சிறந்து விளங்க உறுதுணையாக இருந்தவர் மறைந்த திருமதி கல்பகம் ராமன் அவர்கள் என்றால் மிகையாகாது.

அவரது மறைவால் வாடும் பி.எஸ்.ராமன், அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### ஜூலை 18 தமிழ்நாடு நாள்:

# பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சுப்போட்டி!

சென்னை, ஜூலை 5 -

முதலமைச்சர் அவர்களால் தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய சூலை 18 ஆம் நாளினை "தமிழ்நாடு நாளாக" கொண்டாடப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டது. இவ்வறிவிப்பிற்கிணங்க 2022ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு நாள் விழா சிறப்பாக கொண்டாடப்பெற்று வருகிறது.

தமிழ்நாடு நாள் விழா தொடர்பில் அனைத்து மாவட்டங்களிலும், 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கு கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தி முதல் மூன்று பரிசுகள் மாவட்ட அளவில் வழங்கப்பெறுவதுடன் முதல் பரிசு பெறும் மாணவர் சென்னையில் நடைபெறும் மாநிலப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை பெறுவர்.

சென்னையில் நடைபெறும் மாநிலப் போட்டியில் கலந்து கொண்டு முதல் மூன்று இடம் வகிக்கும் மாணவர்களுக்கு சூலை 18 ஆம் நாளன்று நடைபெறும் தமிழ்நாடு நாள் விழாவில் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்று வருகின்றனர்.

சென்னை மாவட்ட அளவில் நடைபெறும் மாவட்டப் போட்டி 09.07.2024 அன்று சென்னை, அண்ணா சாலையில் அரசினர் மதரசா ஐ ஆஜம் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.10,000/ இரண்டாம் பரிசு ரூ.7,000/ , மூன்றாம் பரிசு ரூ.5,000/ மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பிக்கப்பெறுவர்.

போட்டிகளுக்கான தலைப்புகள்

ஆட்சிமொழி தமிழ் என்ற தலைப்பில் கட்டுரையும்

1. குமரி தந்தை மார்சல் நேசமணி, 2. தென்னாட்டு பெர்னாட்ஷா பேரறிஞர் அண்ணா, 3. முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி என்கிற தலைப்பில் பேச்சுப் போட்டியும் நடைபெறும்.

மேற்கண்டவாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

### சென்னை, புறநகரில் கனமழை!

சென்னை, ஜூலை 5 –

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பரவலாக கனமழை பெய்து வருகிறது. சென்னையில் நேற்று காலை முதலே வெயில் வாட்டிவந்த நிலையில், இரவில் பல்வேறு இடங்களில் கனமழை பெய்தது. சென்னையின் முக்கிய பகுதிகளான சென்ட்ரல், எழும்பூர், ராயப்பேட்டை, நுங்கம்பாக்கம், கீழ்ப்பாக்கம், தியாகராய நகர், அண்ணாநகர், முகப்பேர், ஈக்காட்டுத்தாங்கல், கிண்டி, மீனம்பாக்கம் உள்ளிட்ட இடங்களில் கனமழை பெய்தது.

இதேபோன்று புறநகர் பகுதிகளான தாம்பரம், வண்டலூர், மதுரவாயல், திருவேற்காடு, பூவிருந்தவல்லி, தாம்பரம், அம்பத்தூர், ஆவடி உள்ளிட்ட புறநகர் பகுதிகளிலும் கனமழை பெய்தது. தமிழகத்தில் ஜூலை 9 வரை ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

### 'நீட்' எனும் சமூக அநீதிக்கு எதிரான

# தி.மு.கழகத்தின் போரில் ஒலிக்கும் முழக்கங்கள் நாளைய வெற்றிக்கான அறிவிப்புகள்!

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூலை 5 -

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (03.07.2024) வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

"நீட் எனும் சமூக அநீதிக்கு எதிரான திராவிட முன்னேற்றக் கழகத்தின் போரில் இன்று ஒலிக்கும் முழக்கங்கள் நாளைய வெற்றிக்கான அறிவிப்புகள்!

#BanNEET@Ezhilarasan Cvmp @rajiv_dmk"

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### விக்கிரவாண்டி தொகுதி வாக்காளர்கள்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியின் திட்டங்களை நினைத்து வாக்களிப்பீர்!

### விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை !

சென்னை, ஜூலை 5 -



விக்கிரவாண்டி தொகுதி வாக்காளர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியின் திட்டங்களை எடை போட்டு பார்த்து உதயசூரியனுக்கு வாக்களித்து முதல்வரின் ஆக்கப்பூர்வ பணிகளுக்கு ஊக்கமளித்திட வேண்டுமென்று விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

நடைபெறவுள்ள விக்கிரவாண்டி சட்டப்பேரவை இடைத்தேர்தலில்; கடந்த மூன்று ஆண்டு கால திராவிட முன்னேற்ற கழக தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் செயல்பாடுகளை, குறிப்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடைமுறைப்படுத்தி வரும் அரும் பணிகளை எடை போட்டு பார்த்து வாக்களிக்க வேண்டியது தொகுதி வாக்காளர்களின் கடமையாகும். தமிழ்நாட்டினுடைய ஆட்சி பொறுப்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்ற பொழுது, ஏறத்தாழ ஆறரை லட்சம் கோடிக்கு அதிகமாக கடன் சுமையோடு ஆட்சியை நடத்த வேண்டிய மாபெரும் பொறுப்பு முதல்வருக்கு ஏற்பட்டது. ஆனாலும் தன்னுடைய திறமையாலும், கடும் உழைப்பாலும் எண்ணற்ற அரிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறார்.

முதல்வரின் பல்வேறு திட்டங்கள் அண்டை மாநிலங்களால் பின்பற்றக் கூடிய அரிய திட்டங்களாகும். இதன் மூலம் தமிழ்நாட்டினுடைய வளர்ச்சி மற்றும் பொருளாதாரம் முன்னேறி உள்ளதை புள்ளி விவரங்கள் வெளிப்படுத்துகின்றன. தொழில்துறையில் கடைசி நிலையிலிருந்த தமிழ்நாடு இன்றைக்கு முதன்மை இடத்தை அடைந்திருக்கிறது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரிய முயற்சி மற்றும் அயராத உழைப்பால்

- மாதம் ரூ.1000 உரிமைத் தொகை மகளிருக்கான மகத்தான திட்டம்
- மகளிருக்கான மாபெரும் இலவச பேருந்து திட்டம்
- உயர்கல்வி மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் அரியத் திட்டம்
- பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம்
- கல்வி, சுகாதாரம், தொழில் துறையில் முதலிடத்திற்கு முன்னேற்றம்
- விவசாயத்திற்கு தனி நிதிநிலை அறிக்கை
- தனியார் துறைகளில் இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு
- மக்களைத் தேடி மருத்துவம்
- இல்லம் தேடி கல்வி
- கட்டுமானத்துறையை ஊக்கப்படுத்திட பல்வேறு அறிவிப்புகள்
- பேக்கேஜ் டெண்டர் முறை ஒழிப்பு
- பத்தாண்டு காலம் முடங்கி கிடந்த 18 நல வாரியங்கள் மீண்டும் சீரமைப்பு
- வாரியத்தின் அனைத்து நலத்திட்ட உதவிகளும் இரட்டிப்பாக்கப்பட்டது
- கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள ரூபாய் 4 லட்சம் இலவச நிதி
- 3 ஆண்டு காலத்தில் 21 இலட்சம் அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு ரூ.1646 கோடி நலத்திட்ட உதவிகள்
- 3 ஆண்டுகளில் 16.6 இலட்சம் தொழிலாளர்கள் புதிதாக பதிவு

இப்படி பிற மாநிலங்களும், பிற நாடுகளும் பாராட்டி பின்பற்றக் கூடிய அளவிற்கு அரிய திட்டங்களை தமிழ்நாட்டுக்கு வழங்கிய திராவிட மாடல் ஆட்சியை விக்கிரவாண்டி தொகுதி வாக்காளப் பெருமக்கள் எடை போட்டு பார்த்து வாக்களித்திட வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வெற்றி அளிப்பதன் மூலம் முதல்வரின் ஆக்கப்பூர்வமான பணிக்கு ஒரு அங்கீகாரம் வழங்கி மேலும் அவருடைய பணியை ஊக்கப்படுத்துவதற்கு வாக்காளர்கள் முன் வந்திட வேண்டும்.

விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி மற்றும் கட்டடத் தொழிலாளர்கள் மத்திய சங்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் திண்ணைப் பிரச்சாரம் மூலம் தொழிலாளர்களுக்கு இந்த ஆட்சியின் மூலம் கிடைத்துள்ள எண்ணற்ற திட்டங்களை விளக்கி சொல்லி கட்டுமானம் மற்றும் அமைப்புசாராத் தொழிலாளர்களின் வாக்குகளை சிந்தாமல் சிதறாமல் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளருக்கு பெற்றுத் தந்திட வேண்டும். அதற்கான களப்பணியை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு பொன்குமார் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### மூன்று குற்றவியல் சட்டங்களுக்கு எதிரான வழக்கு:

# ஒன்றிய அரசு பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, ஜூலை 5 -

புதிதாக கொண்டுவரப்பட்ட 3 குற்றவியல் சட்டங்களை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் ஒன்றிய அரசு பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஒன்றிய அரசின் 3 குற்றவியல் சட்டங்களுக்கு எதிராக தூத்துக்குடியைச் சேர்ந்த வழக்கறிஞர் ராம்குமார் ஆதித்தன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

குற்றவியல் சட்டங்களுக்கு இந்தியிலும், சமஸ்கிருதத்திலும் பெயர் சூட்டுவது அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது மற்றும் விரோதமானது என்றும் குற்றம்சாட்டியிருந்தார்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்கள் ஆங்கிலத்தில் மட்டுமே இருக்க வேண்டும் என்றும், வேறு மொழிகளில் சட்டம் இயற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கவில்லை எனவும் சுட்டிக் காட்டியிருந்தார்.

இந்நிலையில், இந்த வழக்கு பொறுப்புதலைமை நீதிபதி மகாதேவன் மற்றும் நீதிபதி முகமது சபீக் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, இந்த வழக்கில் ஜூலை 23ஆம் தேதிக்குள் ஒன்றிய அரசு பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை அன்றைய தினத்துக்கே நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.






விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் அன்னியூர் சிவாவை ஆதரித்து நேற்று முன்தினம் (3.7.2024) பாகம் 136–ல் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர்– அமைச்சர் அன்பரசன் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தார். உடன் செஞ்சி சிவா, மண்டல குழு தலைவர் என். சந்திரன், பகுதி செயலாளர் குணாளன், ஒன்றிய செயலாளர் ரவி நகர செயலாளர் பாபு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், நடராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.கழகம் தலைமையிலான "இந்தியா" கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து விக்கிரவாண்டி பேரூர் பாகம் எண்: 235, வார்டு 13 ரெட்டிகுப்பம் ரோடு 14 வார்டு பழைய காலனி 15 வார்டு பழைய காலனி ஆகிய பகுதிகளில் கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன், வாக்காள பெருமக்களிடம் வாக்குச் சேகரித்தார். உடன் கடலூர் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார், மங்களூர் கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் பட்டூர் வீ.அமிர்தலிங்கம், திட்டக்குடி நகர கழக செயலாளர் வி. பி.பி.பரமகுரு, மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் வழக்கறிஞர் ஏ.மதனகுரு, இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் துரைராஜ் பாரதிராஜா மற்றும் வழக்கறிஞர் அணி இளங்கோவன், தகவல் தொழில்நுட்ப அணி பாசில் சுரேஷ் ஆகியோர் வாக்குச் சேகரித்தனர்.



விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளருமான பி.கே.சேகர்பாபு 2.7.2024 அன்று, பாகம் 230, கேட் காலனி பள்ளி அருகில் உள்ள கடைகள் மற்றும் வீடு வீடாகச் சென்று பொதுமக்களிடம் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்நிகழ்வின் போது பகுதி செயலாளர்கள் தமிழ்வேந்தன், ஐசிஎப்.முரளிதரன், விக்கிரவாண்டி நகர செயலாளர் நைனார் முகமது, விழுப்புரம் நகர செயலாளர் சக்கரை, விக்கிரவாண்டி நகர தலைவர் அப்துல் சலாம், வட்ட செயலாளர் பிடிசி.ரவி மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.